# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 16 புதன்கிழமை 29.05.2024 கதிர் 271







# ஜனாதிபதியின் பதவிக்காலத்தை சர்வஜன வாக்கெடுப்பு மூலம் நீடிப்பதற்கு அரசியலமைப்பில் இடம் கிடையாது!

## பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் எம்.பி. விளக்கமளிப்பு

**"ஜனாதிபதித் தேர்தலை திட்டமிட்ட கால எல்லைக்குள் கட்டாயமாக நடத்தியாக வேண்டும்! ஜனாதிபதியோ அல்லது நாடாளுமன்றமோ அதனைத் தடுக்க முடியாது!", என சுதந்திர மக்கள் பேரவையின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.**

**சுதந்திர மக்கள் பேரவையின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

2➤



## சஜித் அணியினரின் பொருளாதாரக் குழுவுடனான விவாதத்தில் இருந்து தேசிய மக்கள் சக்தி விலகல்

### நளிந்த ஜயதிஸ்ஸ தகவல் தெரிவிப்பு

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்களுக்கிடையிலான விவாதத்துக்கு மாத்திரமே நாங்கள் தயார். எதிர்வரும் 6ஆம் திகதிக்கு பின்னர் விவாதம் குறித்து எந்தப் பேச்சுவார்த்தைக்கும் நாங்கள் தயாரில்லை, என மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தேசிய மக்கள் சக்தியின் விவாத ஏற்பாட்டாளருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.



பொருளாதார குழுக்களுக்கிடையிலான விவாதத்துக்கான திகதியை தாமதிக்காமல் அறிவிக்குமாறு தெரிவித்து, ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன் உறுப்பினரும் விவாத ஏற்பாட்டாளருமான நளின் பண்டார, தேசிய மக்கள் சக்தியின் விவாத ஏற்பாட்டாளர் நளிந்த ஜயதிஸ்ஸவுக்குக் கடந்த திங்கட்கிழமை இரண்டாவது தடவையாக அனுப்பிவைத்திருந்த கடிதத்துக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"விவாதத்துக்கு சில திகதிகளைக் குறிப்பிட்டு, அந்தத் திகதிகளில் ஒரு தினத்தில் இரண்டு கட்சிகளின் பொருளாதாரக் குழுக்களுக்கிடையில் விவாதத்தை நடத்தத் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டிருந்தபோதும் தேசிய மக்கள் சக்தியின் பதில் கடிதத்தில் பொருளாதாரக் குழுக்களுக்கிடையிலான விவாதம் தொடர்பாக எந்தத் தகவலும் தெரிவிக்காமல், அதன் கவனத்தை வேறு திசைக்குகே கொண்டு செல்லும் வழமையான முயற்சிகள் மூலம் இந்த இரண்டு விவாதங்களையும் நடத்தாமல் இருப்பதற்கான திட்டமாகவே இதனை நாங்கள் பார்க்கின்றோம்" - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன் உறுப்பினரும் விவாத ஏற்பாட்டாளருமான நளின் பண்டாரவின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் தேசிய மக்கள் சக்தியின் விவாத ஏற்பாட்டாளர் நளிந்த ஜயதிஸ்ஸ ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

"விவாதம் தலைவர்களுக்கடையில் மாத்திரமே நடத்தப்படும். அதுவும் எதிர்வரும் 6ஆம் திகதியே நடத்தப்படும். 6ஆம் திகதிக்கு அவர்கள் வராவிட்டால் அதன் பின்னர் விவாதம் தொடர்பாக எந்தப் பேச்சும் இல்லை. பொருளாதாரக் குழுக்கள் தொடர்பாகப் பேச்சும் இல்லை. தேவையற்ற வேலைகளுக்கு வர நாங்கள் தயார் இல்லை" - என்றார்.

(அ)



## தேர்தல் ஆணைக்குழுவினரை சந்தித்த அமெரிக்கத் தூதுவர்

இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கும், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கிற்கும் இடையில் விசேட சந்திப்பு நேற்று நடைபெற்றது.

இந்தச் சந்திப்பு தொடர்பில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், தனது எக்ஸ் வலைத்தளத்தில் பதிவொன்றை இட்டுள்ளார்.

"தேர்தலுக்கான திட்டங்கள் மற்றும் வெளிப்படையான செயல்முறையை நிலைநிறுத்துவது குறித்து தேர்தல்கள் ஆணைக் குழுவுடனான சந்திப்பு பாராட்டுக்குரியது. இலங்கை, அமெரிக்கா மற்றும் பல நாடுகள் இந்த ஆண்டு தேர்தலை எதிர்கொள்வதால், ஜனநாயக ஆட்சியின் தூணாகச் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களில் வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்து நாங்கள் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டோம்" - என்று அமெரிக்கத் தூதுவர் தனது எக்ஸ் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

(அ)

## உயர்தரப் பரீட்சை பெறுபெறு நாளைமறுதினம் வெளியீடு!

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நாளைமறுதினம் (31) வெளியிடப்படவுள்ளன என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை கடந்த ஜனவரி மாதம் நடைபெற்றது.

இந்தப் பரீட்சைக்காக 3,46,976 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர்.

இவ்வாறு தோற்றிய பரீட்சார்த்திகளில் 2,81,445 பாடசாலை பரீட்சாத்திகளும், 65,531 தனியார் பரீட்சாத்திகளும் உள்ளடங்குகின்றனர்.

(அ)

## உத்தேச தொழிலாளர் சட்டங்களை அமுல்படுத்தாதீர்கள்! சர்வதேச மன்னிப்புச் சபை அரசாங்கத்திடம் கோரிக்கை

### கடுமையான போராட்டங்கள் எழலாம் எனவும் எச்சரிக்கை

AMNESTY INTERNATIONAL

உத்தேச தொழிலாளர் சட்டங்களை அமுல்படுத்துவதை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நாட்டிலுள்ள தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புக்களின் கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படாவிட்டால் எதிர்காலத்தில் நாடு முழுவதும் கடுமையான போராட்டங்கள் நடைபெறக்கூடும் எனவும் அந்த அமைப்பு அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

தற்போதைய தொழிலாளர் சட்டங்களில் ஏதேனும் சீர்திருத்தங்களை செய்வதாயின் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசித்த பின்னரே அவை மேற்கொள்ளப்படல் வேண்டும் எனவும் சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக் காட்டியுள்ளது

மேலும், சர்வதேச தரங்கள் மற்றும் உரிமைகளை அகற்றுவதன் மூலம் தொழிலாளர் உரிமைகள் மற்றும் பாதுகாப்பை பலவீனப்படுத்தும் வகையிலான முன்மொழியப்பட்ட புதிய சீர்திருத்தங்கள் குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை அதன் கவலையையும் வெளியிட்டுள்ளது.

(ரெம-102)

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# ஐஎஸ்ஐஎஸ் அமைப்பு குறித்து தவறான தகவல் பகிர்ந்தார்!

## கைதான விரிவுரையாளருக்குப் பிணை

ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் கலாநிதி புன்சர அமரசிங்க கோட்டை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஐஎஸ்ஐஎஸ்அமைப்புடன்தொடர்புடைய குற்றச்சாட்டில் கடந்த 20 ஆம் திகதி இந்தியாவில் கைதான நான்கு இலங்கையர்களும்புனர்வாழ்வளிக்கப்பட வேண்டியவர்களின் பட்டியலில் இருந்தவர்கள், என விரிவுரையாளர் கலாநிதி புன்சர அமரசிங்க தகவல் ஒன்றை வெளியிட்டிருந்தார்.

அதையடுத்து, இந்தியாவில் கைது செய்யப்பட்ட குறித்த 4 இலங்கையர்கள் தொடர்பில் தவறான தகவல்களை வெளியிட்ட குற்றச்சாட்டில் அவர் குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தினரால் இன்று கைது செய்யப்பட்டிருந்தார். (04)



# கெக்கிராவ முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் கையளிப்பு

(எம்.எம்.றம்ஸீன்)

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 199 ஆவது கட்டமாக 10 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் அனுராதபுரம், கெக்கிராவ முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச அவர்களின் பங்களிப்புடன் இடம்பெற்ற மேற்படி நிகழ்வின் போது பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினருக்கு ஒரு இலட்சம் ஷரூபா நிதியுதவியும் வழங்கி வைக்கப்பட்டது.

# ஓட்டோ தரிப்பிடத்தில் தகராறு படுகாயமடைந்தவர் உயிரிழப்பு

ஓட்டோ தரிப்பிடம் தொடர்பில் ஏற்பட்ட தகராறில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இளைஞர் ஒருவர் தனது ஓட்டோவை நிட்டம்புவ, திஹாரிய பிரதேசத்தில் உள்ள ஓட்டோ தரிப்பிடத்தில் நிறுத்த முற்பட்டபோது அங்கிருந்த ஏனைய சாரதிகள் அந்த இளைஞருடன் தகராறில் ஈடுபட்டனர்.

இதன்போது, அங்கிருந்த இளைஞரின் தந்தை தனது மகனைக் காப்பாற்ற முற்பட்டபோது தாக்குதலுக்குள்ளாகிப் படுகாயமடைந்தார்.

அவர் நிட்டம்புவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நிட்டம்புவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# எதிர்வரும் இரு தினங்களில் பாடசாலைகள் இயங்கும்!

பாடசாலைகள் நாளை (30) மற்றும் நாளை மறுதினங்களில் வழமை போன்று இயங்கும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் இரு தினங்களில் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவுள்ள நிலையில் கல்வி அமைச்சு இந்த அறிவித்தலை விடுத்துள்ளது. (04)

## ஜனாதிபதி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"நாடாளுமன்றத் தேர்தலா? அல்லது பொதுத் தேர்தலா? முதலில் நடைபெறும் என மக்கள் ஆர்வமாக உள்ளனர். எது எப்படி இருப்பினும் ஜனாதிபதித் தேர்தலை குறித்த நேரத்திற்குள் நடத்தியாக வேண்டும்!", எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் - "ஜனாதிபதித் தேர்தலுக்கென ஒதுக்கப்பட்ட நிதியையோ அல்லது அதன் ஒரு பகுதியையோ நாடாளுமன்றத் தேர்தலுக்காகப் பயன்படுத்த முடியாது என சட்டத்தில் மிகத் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு நடத்தினாலும் கூட்டு நிதியத்திலிருந்து தனித் தொகையை ஒதுக்கியே நாடாளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டும்" என்றார்.

தற்போதைய ஜனாதிபதியின் பதவிக் காலத்தை சர்வஜன வாக்கெடுப்பு மூலம் நீடிப்பதற்கு இலங்கை அரசியலமைப்பில் இடமில்லை. அதனைச் சட்ட ரீதியாகச் செய்ய முடியாது, எனவும் ஜி.எல். பீரிஸ் எம்.பி. மேலும் குறிப்பிட்டார். (ரெம-101)

# யாழ். போதனா வைத்தியசாலையின் விபத்து – அவசர சிகிச்சைப் பிரிவின் ஐந்தாம் வருட நிறைவு விழா இன்று!

யாழ். போதனா வைத்தியசாலையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவின் ஐந்தாம் வருட நிறைவு விழா நிகழ்வுகள் வைத்தியசாலையில் இன்று நடைபெற்றன.

குறித்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ், வட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சமன்பத்திரன, யாழ் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம.பிரதீபன், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, யாழ் மருத்துவ சங்கத் தலைவர் சுதர்சன், அரச மருத்துவ சங்கத்தின் உப தலைவர் சத்திர சிகிச்சை நிபுணர் எஸ் மதிவாணன்,வைத்திய நிபுணர்கள், தாதிய பயிற்சி கல்லூரி அதிபர் மற்றும் தாதியர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர். (01)

# மைத்திரிபாலவுக்கு எதிரான தடை ஜூன் 12 ஆம் திகதி வரை நீடிப்பு!

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயற்படுவதைத் தடுக்க விதிக்கப்பட்ட தடையை மேலும் நீடித்து கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதன்படி எதிர்வரும் ஜூன் மாதம் 12 ஆம் திகதி வரை குறித்த தடையை நீடித்து கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடு, கொழும்பு மாவட்ட நீதிபதி சந்துன் விதான முன்னிலையில் இன்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே சு.கவின் தலைவராக மைத்திரிபால சிறிசேன செயற்படுவதைத் தடுக்க விதிக்கப்பட்ட தடை உத்தரவை ஜூன் மாதம் 12 ஆம் திகதி வரை நீடித்து நீதிபதி உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்றிட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV
YouTube தளம்
உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com



# திருமலை அறிவு ஒளி மையம் மாணவர் மன்றத்தில் சந்தை

(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலையில் உள்ள பத்தாம் குறிச்சி அறிவு ஒளி மையத்தின் முத்தமிழ் மாணவர் மன்றத்தில் நேற்று (28) மாணவர்களால் சந்தை ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

முத்தமிழ் மாணவர் மன்றப் பொதுச் செயலாளர் இளங்கோவன் ரிஷிகவி மற்றும் பொருளாளர் தினேஷ்குமார் சாத்விகா தலைமையில், திறன்சார் அபிவிருத்தித் துறைச் செயலாளர் சித்தார்த்தன் லிதுர்ஷன், சுகாதாரத் துறைச் செயலாளர் இளங்கோவன் டிலுக்ஷாயினி, செயலாற்றுக் குழு உறுப்பினர் நிஷாந்தன் பவிநயா மற்றும் நிலோஜ் வர்ஷனா ஆகியோரால் சிறப்பான முறையில் மாணவர் சந்தை நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

இத்திட்டத்தின் மூலம் கிடைக்கப் பெற்ற வருமானம் மாணவர் மன்றச் செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படும்.

அறிவு ஒளி மையத்தின் நிறுவனர் அஜித் குமார், நிர்வாகச் செயலாளர் புகழ்வேந்தன் டிலக்ஷிகா ஆகியோரால் இந்த சந்தையானது ஆரம்பித்து வைக்கப்பட்டது.

# மட்டக்களப்பு பிராந்திய இளைஞர் யுவதிகளுக்கு தகவலறியும் சட்டமூலம் தொடர்பில் செயலமர்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)



தகவலறியும் உரிமைச்சட்டமூலம் தொடர்பில் இளைஞர்கள் மற்றும் யுவதிகளின் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயலமர்வு அண்மையில் மட்டக்களப்பில் இடம்பெற்றது.

மட்டக்களப்பிலுள்ள அமெரிக்க ஐ ஹபின் அனுசரணையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில், தகவலறியும் உரிமைச் சட்டமூலத்தை வினைத்திறனாக பயன்படுத்துவது, அதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பது, அதனுடன் தொடர்பான அதிகாரிகளைத் தொடர்பு கொள்வது பற்றிய விளக்கங்களை சிரேஷ்ட ஊடகவியலாளரும், தகவலறியும் உரிமைச் செயற்பாட்டாளருமான றிப்தி அலியினால் தெளிவாக வழங்கப்பட்டது.

மட்டக்களப்புப் பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் யுவதிகள் பங்கேற்ற இந்த செயலமர்வில் அவர்கள் வினவிய கேள்விகளுக்கு விளக்கங்களையும் பெற்றுக்கொண்டனர்.

தொடர்ச்சியாக இந்தச் செயலமர்வு நாடு தழுவிய ரீதியில் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.






# மிதி வெடி




"நாயைக் குளிப்பாட்டி, நல்லதோர் மந்திரம் ஓதி, நடு வீட்டில் வைத்-தாலும் - அது வாலைக் குழைத்துக் கொண்டு மலம் தின்னப் போகும்!"

இப்பிடியொரு பழமொழி இருக்கிறது எல்லாருக்கும் தெரியும். அது இங்க இருக்கிற கனபேருக்குப் பொருத்தம் பாருங்கோ..

என்னதான் "ஜனநாயக நீரோ-ட்டத்தில்" கலந்து கொண்டாலும் ஆயுதம் ஏந்தி, அடி தடிய நம்ப-ின கூட்டம் ஒரு காலத்திலையும் திருந்தாதுகள் பாருங்கோ. திருந்த வாய்ப்பும் இல்லை!

உதைத் தான் "ஆடின காலும், பாடின வாயும் சும்மா இருக்காது" எண்டும் சொல்லுறவை.

98, 99 காலப்பகுதி எண்டு நினைக்கிறன். இராணுவத்தின்ர முழுக் கட்டுப்பாட்டோட யாழ். நகரத்தில ஒட்டுக் குழுக்கள் வலம் வந்த காலம். நெல்லியடியில ஆளை வெட்டிப் போட்டு, யாழ்ப்பாணம் "ரவுண்"க்குள்ள தலைய வக்கிற காலம். அந்தக் காலத்திலயும் என்ர வாய் சும்மா இருக்கேல்ல. அப்பவும் ஒரு பத்திரிகையில இப்பிடித் தான் அலட்டிக் கொண்டிருந்தனான்!

அண்டைக்கொரு நாள் அந்தப் பத்திரிகை அலுவலகத்தின் தொலைபேசிக்கு ஒரு அநாமதேய அழைப்பு, மத்தியில கூட்டாட்சி செய்யிறவையின்ர கட்சி அலுவலகத்தில இருந்து தான் அந்த அழைப்பு!

"நரமுனியோட கதைக்க வேணும்!!!" அழைத்தவர் கடுந்தொனியில் கேட்க, தொலைபேசியுடன் இருந்த அக்கா ஆடிப் போயிட்டார். பயந்தடிச்சுக் கொண்டு அழைப்பை என்னுடைய மேசையில் இருந்த தொலைபேசிக்கு மாற்றி விட, நான் ஆர. எவர், என்ன - ஏது எண்டு கதைக்கத் தொடங்க முன்னமே மறுமுனையில் இருந்தவர் பொரிந்து தள்ளத் தொடங் கினார. "டேய் நரமுனி, உன்னை நரபலி எடுப்பமடா. எங்களைப் பற்றித் தெரியேல்ல. நீ பள்ளிக்கூடத்துக்குப் புள்ளையக் கொண்டு போகேக்க போட்டுத் தள்ளிப் போடுவம். கன்னாதிட்டி வாய்க்காலுக்குள்ள தலை கிடக்கும் . " அவ்வளவு தான் அழைப்பு "கட்".

இந்தக் காலத்தில மாதிரி அந்தக் காலத்தில கைத் தொலைபேசி இல்லை. அலுவலகத்துக்கு வரும் அழைப்பைக் கூட அடையாளம் காணேலாது. ஆனால், "ரெலிகொம்"ல இருந்த அன்பர்கள் - நண்பர்கள வைச்சு ஆர் அழைத்தவை எண்டு நாங்கள் கண்டு பிடிச்சது வேற கதை.

நான் என்ன சொல்ல வாறன் எண்டால. பள்ளிக்கூடத்தால அப்பிடியே பத்திரிகை அலுவலகத்துக்கு வேலைக்கு வந்த எங்கள, பிள்ளையப் பள்ளிக் கூடம் விடுற ஆள் எண்டு தேடினவை, இப்ப "காலைக்கதிர்"ல கட்டுரை எழுதினதுக்கெண்டு தேடித் திரிகினமாம்.

ஒருத்தன் உங்களப் பற்றி ஒண்டைச் சொன்னா. அதில இருக்கிற பிழை - சரியளை ஆராஞ்சு திருத்த வேண்டியதுகளைத் திருத்திறதை விட்டுட்டு, பிழை பி-டிச்சவனைப் போட்டுத் தள்ளுறதுக்குத் தேடித் திரியினமாம்..! வடிவேல் சொன்னது மாதிரி "சின்னப்புள்ளைத் தனமா" எல்லோ இருக்குது?

அது வேறயொண்டும் இல்லைப் பாருங்கோ. அந்தக் காலத்தில இருந்து அதட்டி வேலை செய்விச்சுப் பழகின ஆக்களுக்குப் பழக்க தோசம் - கைகால் சும்மா இருக்குதில்லப் போல?

தரவையில மேஞ்ச மாடுகளைத் தட்டிக்குள்ள அடைச்சு வைச்சால் இப்படித் தான் இருக்கும்!

போன கிழமை "கம்பஸ்" கட்டிடத்துக்கு கண்டவையும் சொந்தம் கொண்டாடுக-ினம் எண்டு எழுதினது தானாம் அவையளுக்குப் பிரச்சினை.

இன்னுமொண்டைச் சொல்லிப் போட்டுப் போறன்! நடந்து முடியேக்க நீங்களே தீர்மானிப்பியள். எது சரி? எது பிழை எண்டு.

யாழ்ப்பாண மரபுகளைக் காக்கிறம். கட்டி வளக்கிறம் எண்டு மாநகரத்தில அதி-காரத்தில இருந்த தம்பி ஒரு கழகம் அமைச்சவரெல்லோ? அதுவும் அரசியல் தான்.

கழகத்துக்கு ஆள் சேர்க்கேக்க தன்ர கட்சிக்காரர் அல்லாத - வேற கட்சி ஆக்கள் வராமல் பாத்துக் கொண்டவர். சகட்டு மேனிக்கு நாலஞ்சு சக்கட்டயள வெளியில இருந்து போட்டவர். ஆனா மாற்றுக் கட்சிக்காரர் வந்துடக் கூடாது எண்டு தெளிவா இருந்தவர். மாநகரத்தில அவரது ஆட்சி முடிஞ்சதும் கழகம் "அட்ரஸ்" இல்லாமல் போயிட்டுது.

அந்த நேரம், வேணுமெண்டே ஒதுக்கப்பட்ட "அவை"யின்ர தலைவர் இப்ப மரபுகளைப் பேண வேணும் எண்டு காரியத்தில இறங்கியருக்கிறார். அதைச் செய்யறதுக்கு அவர் நூறு வீதம் பொருத்தமானவர் தான் பாருங்கோ.

யாழ்பாண இராச்சியத்தின், நல்லூர் இராசதானியில பரம்பரை உரித்துள்ளவர். ஆண்டாண்டு காலமா அங்கயே வாழுறவர் - அயலவர். மாநகரத்துக்கு ஆணையிடுற அளவுக்கு அதிகாரமாய் இருந்தவர். எல்லாத்தையும் விட வாரலாறு தெரிஞ்சவர். இப்ப அவரை - இவரைப் பிடிச்சு, ஒரு மாதிரி நாட்டுத் தலைவரைக் கொண்டு மந்திரி மனையைப் பாதுகாக்கிறதுக்குச் சம்மதம் வாங்கீற்றார்!

அவைத்தலைவரின் "ரிக்குவெஸ்ட்", ஒரு எம்.பியின்ர "ரெக்கமன்டேசன்" எண்டு காரி யம் கைகூடப் போகுது.

இதுக்குள்ளயும் "நான் தான்" கூட்டம் நாண்டு கொண்டு தலையப் போடுறதாக் கேள்வி.

பாப்பம் எப்படியும் திறப்பு விழாவுக்கு அழைப்பு வரும் தானே? அடிவருடல் அமைச்சரா? இல்லை, அதிகார அம்மணியா "பவர்" கூடினவை எண்டு அப்ப தெரியும் தானே? இப்ப என்ன அவசரம்.?

நரமுனி

# 55 வயது நிறைவடைந்த தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு நிவாரணம் வழங்க யோசனை!



பலதரப்பட்ட தொழில் துறைகளிலும் பணியாற்றும் 55 வயது நிறைந்த அனைத்து தொழிலாளர்களுக்கும் சமூகப் பாதுகாப்பு நிவாரணம் வழங்குவதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

"கருசரு" வேலைத்திட்டத்திற்கு இணையாக செயற்படுத்தப்படவிருக்கும் இத்திட்டத்துக்கான சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (28) நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் தகவல் தெரிவித்த அமைச்சர்,

"மக்களுக்குப் பண்டிகைகளைக் கொண்டாட மன நிம்மதி இல்லை என்று சிலர் குற்றம் சாட்டுகின்றனர். ஆனால், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கம் வெசாக், பொசன் பண்டிகைகளை மாத்திரமன்றி நத்தார் பண்டிகையையும் கொண்டாடுவதற்குத் தேவையான சூழலை உருவாக்கியுள்ளது. அதனால் குற்றச்சாட்டுக்களை முன்வைப்போர் கடந்த வருடத்துடன் தற்போதைய நிலையை ஒப்பிட்டுப் பாருங்கள் என்றே சொல்வேன். மக்கள் இழந்திருந்த மன நிம்மதி மீட்டுக் கொடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தைச் சாடும் எவரிடத்திலும் சரியான பொருளாதாரத் திட்டமொன்று இல்லை. அப்படியொரு வேலைத்திட்டம் இருந்தால் முன்வையுங்கள்.

நாங்கள் சொன்னதை செய்துக்காட்டிக் கொண்டிருக்கிறோம். அஸ்வசும, உறுமய உள்ளிட்ட திட்டங்கள் ஊடாக மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத்தில் இருந்தாலும் இதற்கு முன்னர் அவர் ஜனாதிபதியாக இருந்ததில்லை. அவர் முதல் முறையாக பதவியேற்றதில் இருந்து பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார். 25 வீதமாகக் காணப்பட்ட வங்கி வட்டி இன்று 12 - 8 வீதமாகக் குறைந்துள்ளது.

மேலும், ஊழல் தடுப்புச் சட்டம், தேர்தல் செலவு ஒழுங்குபடுத்தல் சட்டம், சொத்துப் பொறுப்புச் சட்டம் ஆகியவற்றில் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. பொருளாதார மாற்றம் தொடர்பான சட்டமூலம் மற்றும் பொது அரச நிதி முகாமைத்துவச் சட்டமூலம் என்பன நாடாளுமன்றத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் நாட்டைக் கட்டியெழுப்பி, ஊழலை ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது, என்றும் குறிப்பிட்டார். பலதரப்பட்ட தொழில் துறைகளிலும் பணியாற்றும் 55 வயது நிறைந்த அனைத்து தொழிலாளர்களுக்கும் சமூகப் பாதுகாப்பு நிவாரணம் வழங்குவதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் மனுஷ நாணயக்கார இதன்போது தெரிவித்துள்ளார்.

"கருசரு" வேலைத்திட்டத்திற்கு இணையாக செயற்படுத்தப்படவிருக்கும் இத்திட்டத்துக்கான சட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

"தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது. அரசாங்கம் அறிவிக்கும் சம்பளத்தை வழங்க முடியாதெனக் கூறுவோரின் காணிகள் அரசாங்கத்தினால் கையகப்படுத்தப்படும். பின்னர் அந்த்த் தோட்டங்கள் நீண்ட கால குத்தகை அடிப்படையில் அவற்றை முறையாக நிர்வகிக்கக்கூடிய தரப்பினருக்கு வழங்கப்படும்.

அதற்குத் தேவையான சட்டத் திருத்தங்களை மேற்கொள்வதற்கான அமைச்சரவை அனுமதியையும் ஜனாதிபதி பெற்றுக் கொண்டுள்ளார்" எனவும் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார். (04)

## ஐஎஸ் அமைப்பினரை பற்றிய விசாரணை இலங்கை வரும் குஜராத் அதிகாரிகள் குழு!



இந்தியாவின் குஜராதில் கைது செய்யப்பட்ட ஐஎஸ் பயங்கரவாதிகளான 4 இலங்கையர்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள குஜராத்தின் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் இலங்கைக்கு வரவுள்ளனர்.

இலங்கை அரசாங்கம் இந்த விவகாரம் தொடர்பில் இரண்டு பேரைக் கைதுசெய்துள்ளது. எனினும் சந்தேக நபரான ஒஸ்மண்ட் ஜெராட் என்பவர் தலைமறைவாகியுள்ளார்.

ஜெராட் தேடப்படுகின்றார் என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளதுடன், அவரைப்பற்றிய தகவல் வழங்குவோருக்கு சன்மானத்தையும் அறிவித்துள்ளது.


மே 20 ஆம் திகதி குஜராத்தின் அஹமதாபாத் விமான நிலையத்தில் ஐஎஸ் அமைப்புடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் இலங்கையைச் சேர்ந்த நால்வரை குஜராத் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் கைதுசெய்தனர். இதன் மூலம், பாரிய தாக்குதல் முயற்சியை முறியடித்துள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் குறித்து மாநிலத்துக்கு வெளியே விசாரணைகளை மேற்கொள்வதில் குஜராத் பயங்கரவாத தடுப்புபிரிவின் மூன்று குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

அவர்களின் விசாரணைகளின் மூலம் ஒஸ்மன்ட் ஜெராட் என்ற நபர் நான்கு சந்தேகநபர்களிற்கும் நான்கு இலட்சம் ஷரூபாய்களை வழங்கியமையும், இந்த நபர் அடிக்கடி தனது தோற்றத்தை மாற்றுவதும் தெரியவந்துள்ளது.

அவர்கள் வழங்கிய விபரங்களின் அடிப்படையில், இலங்கை அதிகாரிகள் இரண்டு சந்தேகநபர்களை கைதுசெய்துள்ளதாகவும், ஒஸ்மன்ட் ஜெராட் என்பவர் தலைமறைவாகியுள்ளார் எனவும் குஜராத்தின் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

விசாரணைகளின் போது இந்தியாவில் சந்தேகநபர்களின் நடவடிக்கைகளிற்கு மேலும் மூவர் உதவியமையும் தெரியவந்துள்ளது. (04)



## வங்காள விரிகுடாவில் புதியதொரு வளிமண்டல மேலடுக்குச் சுழற்சி!

எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி வங்காள விரிகுடாவில் புதிய வளிமண்டல மேலடுக்கு சுழற்சி ஒன்று உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது, என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக எதிர்வரும் ஜூன் 1 முதல் 5 வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகள் உட்பட நாட்டின் பல பகுதிகளுக்கும் மிதமான முதல் கனமான மழைக்கு வாய்ப்புள்ளது.

இவ்வாண்டுக்கான தென்மேற்குப் பருவக்காற்று இன்று இலங்கையின் தெற்கு மற்றும் மேற்கு பகுதிகளுக்கு வீசத் தொடங்கியுள்ளது. அதனால், இலங்கையின் கரையோரப் பகுதிகளில் காற்றின் வேகம் உயர்வாக இருக்கும். அத்தோடு கடற்பகுதிகளில் அலைகளின் உயரமும் உயர்வாக காணப்படும்.

கடல் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்பதனால் இலங்கையின் அனைத்துப் பகுதி மீனவர்களும் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை கடலுக்குச் செல்வதைத் தவிர்ப்பது சிறந்தது, என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (04)

## அக்கரைப்பற்று பிரதேசத்தில் திடீர்ப் பரிசோதனை எட்டு உணவகங்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை

(எம்.ஏ.ஏ.அக்தார்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் திருமதி சகீலா இஸ்ஸடீனின் அறிவுறுத்தலுக்கமைய, பிராந்திய சுற்றுச்சூழல் தொழில்சார் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி ஏ.எஸ்.எம்.பௌசாத்தின் பங்களிப்புடன் அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பிரதேசங்களில் உணவு கையாளும் நிறுவனங்கள் திடீர்ப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, ஆலையடிவேம்பு ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்களின் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களினால் அக்கரைப்பற்று பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் உணவு நிலையங்களில் திடீர்ச் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, மனித நுகர்வுக்குப் பொருத்த மற்ற உணவுகள் கைப்பற்றப்பட்டு அவை அழிக்கப் பட்டன. குறித்த தினம் 65 உணவு கையாளும் நிறுவனங்கள் சோதனை செய்யப்பட்டு, அதில் 8 நிறுவனங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. மேலும் வர்த்தகர்கள் மற்றும் உணவக உரிமையாளர்களுக்கு அறிவுரை ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

இதில், அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எம்.எம்.ஏ.காதர், அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எல்.இஸ்மாயில் உட்பட சிரேஷ்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள், பிராந்திய சுற்றுச்சூழல் தொழில்சார் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்புப் பிரிவு உத்தியோகத்தர்கள் எனப் பலர் இணைந்திருந்தனர்.

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இன்று பதிப்புத் துறையை ஊக்குவிக்கும் ஒன்றுகூடல்





கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் ஆசிரியர்களின் பதிப்புத்துறைசார் ஆர்வத்தை அதிகரிக்கும் நோக்குடனான ஒன்றுகூடல் இன்று காலை ஆரம்பக் கல்வி நெறி ஆசிரிய மாணவி திருமதி கோகுலக்கண்ணன் மைதிலி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஆசிரிய மாணவர் உரையை விசேட கல்வி நெறி ஆசிரிய மாணவி திருமதி அஸ்மிதா பேகம் ஆற்றினார்.

'ஆசிரியர்கள் வெற்றிகரமாக புத்தக வெளியீடு செய்து சந்தைப்படுத்துவதற்கான உத்திகள்' - என்ற தொனிப்பொருளில் ஓய்வு நிலை சமூக சேவை உத்தியோகத்தரும் புத்தக வெளியீட்டாளருமாகிய வேதநாயகம் தபேந்திரன் சிறப்புரை ஆற்றினார்.


இவருக்கான அறிமுக உரையை கலாசாலை விரிவுரையாளர் த. தவசேகர் ஆற்றினார். கலாசாலை அதிபர் ச.லலீசன் நிறைவுரை ஆற்றினார்.

இலங்கையில் வெளிவந்த புத்தகங்களில் 75 வீதமான புத்தகங்கள் ஆசிரியர்களாலேயே வெளியிடப்பட்டுள்ளன எனக் குறிப்பிட்ட கலாசாலை அதிபர், குறைந்த பட்சம் மின் நூல் வெளியிடும் பழக்கத்தையாவது பயிற்சிக்காலத்தில் ஆசிரிய மாணவர் ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

இதே வேளை புகையிலை ஒழிப்பு தொடர்பான காணொளி ஆசிரிய மாணவர்களால் தயாரித்து காட்சிப்படுத்தப்பட்டது.

# கலைமகள் மகாவித்தியாலய கணிதப் பூங்கா திறப்பு விழா!








(காரைதீவுச் செய்தியாளர்)

சம்மாந்துறை வலய நாவிதன்வெளிக் கோட்டத்தில் உள்ள வேப்பையடி கலைமகள் மகாவித்தியாலய கணிதப் பூங்காவானது, வித்தியாலய அதிபர் கே.தியாகராஜா தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டது .

கல்வி அமைச்சின் ஜெம் திட்டத்தின் கீழ் மூன்றரை லட்ச ஷரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்தப் பூங்காவை, பிரதம அதிதியாக கலந்து கொண்ட சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்எச்எம். ஜாபீர் திறந்து வைத்தார் . கௌரவ அதிதிகளாக பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான பீ.எம்.வை.அரபாத் , பி.பரமதயாளன், எச். நைஷரூஸ்கான், உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, பாடசாலை இணைப்பாளர் எஸ்.மோகன் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள். விசேட அதிதிகளாக முன்னாள் அதிபர்களான என். பிரபாகர் , கே.பேரானந்தம், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் கே.மதிவண்ணன் ஆகியோர் பங்கேற்றனர். மிகவும் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட கணிதப் பூங்காவில் காட்சிப் படுத்தப்பட்ட கணித உருக்களுக்கான விளக்கங்களை மாணவர்கள் விபரித்தார்கள். புதிய அதிபர் கே. தியாகராஜாவின் காத்திரமான அர்ப்பணிப்பான சேவை பற்றி வாழ்த்துரைகள் வழங்கப்பட்டன. பாடசாலை வரலாற்றில் முதல் தடவையாக பாடசாலைக் கீதம் ஓடியோ வடிவில் தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் ஜாபீரினால் அங்கு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

பிரதி அதிபர் எம். தர்மலிங்கம் நன்றியுரையாற்றினார். நிகழ்ச்சிகளை உப அதிபர் எஸ். நடனசபேசன் நெறிப்படுத்தித் தொகுத்து வழங்கினார். இந்த நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# யாழ். மாவட்ட பதிவாளர் நாயகத் திணைக்கள ஒரு நாள் சேவைகள் நிறுத்தத்தால் சிரமம்!

## குறைகளைக் களைய போராட்டம் நடத்த முஸ்தீபு

யாழ்ப்பாணம் மாவட்ட பதிவாளர் திணைக்களத்தில் பிரதியாக்க இயந்திரங்கள் (போட்டோ கொப்பி) பழுதடைந்துள்ளமையால் சேவை பெறச் செல்லும் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இயந்திரங்கள் பழுந்தடைந்துள்ள காரணத்தால், திணைக்களத்தில் காணிகளுக்கான தோம்பு மற்றும் உறுதி பிரதிகளை வழங்கும் ஒருநாள் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

**விற்பனைக்கு பிந்திய சேவையில் திருப்தியின்மை**

இயந்திரங்களை விற்பனை செய்த நிறுவனங்களே விற்பனைக்கு பிந்திய சேவைகளை வழங்குவதானல், அவர்களே பழுதுகளை சரி செய்ய ஊழியர்களை அனுப்பி வைப்பார்கள்.

இயந்திரங்கள் பழுந்தடைந்தமை தொடர்பில் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் , அவர்கள் தமது ஊழியர்களை அனுப்பாதமையால், இயந்திரங்கள் திருத்தப்படாத நிலையில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

**மக்களுக்கு வீண் அலைச்சல்**

தூர இடங்களில் இருந்து வருபவர்கள், அவசர தேவை உடையவர்கள் ஒருநாள் சேவையை நாடுகிறார்கள்.

ஒருநாள் சேவைக்கான கட்டணங்கள் அதிகமாகும்.

தோம்பு ஒன்றினை ஒருநாள் சேவையில் பெற 200 ஷரூபாயும் சாதாரண சேவையில் பெறுவதற்கு 120 ஷரூபாயும் அறவிடப்படுகிறது.

அதேபோன்று உறுதி பிரதி ஒன்றினை ஒருநாள் சேவையில் பெற 1000 ஷரூபாயும் சாதாரண சேவையில் பெற 600 ஷரூபாயும் அறவிடப்படுகிறது.

இவ்வாறான நிலையில் அவசர தேவைக்காக, காலையில் ஒருநாள் சேவைக்கு விண்ணப்பித்து, மதியத்திற்குப் பின்னர் அதனைப் பெறச் செல்லும் போது , “இயந்திரம் பழுந்தடைந்து விட்டது!” என உத்தியோகஸ்தர்கள் கூறுவதால், சேவையைப் பெறச் சென்றவருக்கு வீண் அலைச்சலுடன் பணமும் நஷ்டமடைகிறது.

ஒருநாள் சேவையைப் பெறவே அதிக கட்டணம் செலுத்தும் நிலையில் மறுநாள் அவற்றை வழங்குவதால், அது சாதாரண சேவையாகவே கருதப்படும். ஆனால், ஒருநாள் சேவைக்கு என வழங்கிய பணத்தினை மீளக் கையளிக்கும் நிலையும் அங்கு இல்லை. இதனால், சேவைகளைப் பெறச் செல்லும் மக்கள் மாத்திரமின்றி சட்டத்தரணிகள் மற்றும் நொத்தாரிசுகள்கூட சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இது தொடர்பில் யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம் கவனம் செலுத்தி, பதிவாளர் நாயகத்துடன் தொடர்புகொண்டு குறைபாடுகள் சிலவற்றையாவது நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சேவை பெற வந்தவர்கள் கோரினார்கள்.




**உத்தியோகஸ்தர்கள் பற்றாக்குறை**

அதேவேளை யாழ்.மாவட்ட பதிவாளர் திணைக்களத்தில் உத்தியோகஸ்தர்களுக்கான வெற்றிடங்கள் நீண்ட காலமாக நிரப்படப்படாமல் உள்ளமையால், திணைக்கள உத்தியோகஸ்தர்கள் கடும் வேலைச் சுமைகளுடன் கடமையாற்றுவதாக தெரிவிக்கப்படுகிறது.

வெற்றிடங்களை நிரப்புமாறு பதிவாளர் நாயக திணைக்களத்திடம் பல தடவைகள் கோரியும் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

அத்துடன் சில நேரங்களில் காகிததாதிகள் உள்ளிட்டவற்றை பெற்றுக்கொள்வதில் கூட உத்தியோகஸ்தர்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மழை காலங்களில் கீழ் தளத்தில் மழை வெள்ளம் தேங்கி நிற்பதால் திணைக்களச் சேவைகள் இடைநிறுத்தப்பட்ட சம்பவங்களும் உண்டு.

யாழ்.மாவட்ட பதிவாளர் திணைக்களம் ஊடாக நாளாந்தம் சுமார் 3 இலட்ச ஷரூபாய்க்கும் அதிகமான வருமானத்தினை பதிவாளர் திணைக்களம் பெற்றுக்கொள்கின்ற போதிலும், மாவட்டத்திணைக்களத்தை வினைத்திறனுடன் மக்களுக்குச் சேவை செய்வதற்குரிய வசதிகளை செய்து கொடுக்காது தலைமை அலுவலகம் அசண்டையீனமாக காணப்படுவதாகவும் குற்றம் சாட்டப்படுகிறது.

**போராட்டம் நடத்த முனைப்பு**

யாழ்.மாவட்டப் பதிவாளர் திணைக்களத்தில் காணப்படும் குறைபாடுகள், வளப் பற்றாக்குறைகள் தொடர்பில் தலைமை அலுவலகமான பதிவாளர் திணைக்களத்திற்கு பல தடவைகள் முறையிட்டும் எந்தப் பயனும் இல்லாத நிலையில், திணைக்களத்தின் 160 ஆவது ஆண்டினை முன்னிட்டு, எதிர்வரும் ஜூன் மாதம் 6ஆம் திகதி பதிவாளர் நாயகமான டபிள்யு. ஆர்.ஏ.என்.எஸ்.விஜயசிங்க யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ள நிலையில், அவரிடம் நேரில் கோரிக்கைகளை முன் வைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமது கோரிக்கைகளை நேரில் முன் வைத்த பின்னர், ஒரு மாத கால அவகாசம் கொடுக்கப்பட்டு, அவற்றை நிவர்த்தி செய்யத் தவறும் பட்சத்தில் போராட்டம் நடத்துவது தொடர்பாக ஆராயப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(01)








## தெல்லிப்பழையில் விடுவிக்கப்பட்ட காணிக்குள் பிரவேசிக்கத் தடை!

தெல்லிப்பழை ஒட்டகப்புலத்தில் அண்மையில் விடுவிக்கப்பட்ட 234.83 ஏக்கர் காணிக்குள் பொதுமக்கள் பிரவேசிப்பதற்கு தற்காலிக தடை அறிவிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண ஆளுநர் செயலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த செய்தி குறிப்பில், விடுவிக்கப்பட்டுள்ள பகுதியில் சுமார் 55 ஆயிரம் சதுர அடி காணியில் கண்ணிவெடிகள் காணப்படகூடும் என்ற அச்சம் வெளியிடப்பட்டுள்ள நிலையில், யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தால் உரிய தீர்வு காண்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய எதிர்வரும் ஜூன் மாதம் பத்தாம் திகதி வரை விடுவிக்கப்பட்ட காணிகளுக்கு செல்ல வேண்டாம் என காணி உரிமையாளர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

விடுவிக்கப்பட்டுள்ள காணிகளில் எதிர்வரும் முதலாம் திகதி முதல் தொழிநுட்ப ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதன்போது கண்ணிவெடிகள் காணப்படும் இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டால், அந்தப் பகுதிகளை தவிர்த்து ஏனைய காணிகளுக்குள் எதிர்வரும் பத்தாம் திகதிக்கு பின்னர் பொதுமக்கள் தங்களின் மீள்குடியேற்ற செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கண்ணிவெடிகள் காணப்படும் பட்சத்தில் அவற்றை உரிய நடைமுறைகளை பின்பற்றி செயலிழக்கச் செய்யப்பட்டு அகற்றப்படவுள்ளன. அதன் பின்னர் குறித்த பகுதிகள் கண்ணிவெடி அற்ற பிரதேசமாக அறிவித்தல் விடுக்கப்பட்டதும் பொதுமக்கள் எவ்வித இடையூறும் இன்றி தங்களின் காணிகளுக்குள் செல்ல முடியும். பொதுமக்களின் பாதுகாப்பு நலன் கருதி இந்த தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது.

வசாவிளான் கிழக்கு(ஜே-244), வசாவிளான் மேற்கு(ஜே-245), பலாலி வடக்கு(ஜே-254), பலாலி கிழக்கு(ஜே-253), பலாலி தெற்கு(ஜே-252) ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்குட்பட்ட 234.83 ஏக்கர் காணி விவசாய நடவடிக்கையின் நிமித்தம் அண்மையில் விடுவிக்கப்பட்டது.

இராணுவக்கட்டுப்பாட்டிற்குள் காணப்பட்ட இந்தப் பகுதிக்கு பொதுமக்கள் இலகுவாக செல்லக்கூடிய வீதிகளும் வடக்கு மாகாண ஆளுநரின் கோரிக்கைக்கு அமைய விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது – என்றுள்ளது. (04)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.05.2024இல் வெளியிடப்பெற்றது.